முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2016 யூலை

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2016-07-17
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 09
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

அரசாங்கம் பொதுச் செலவுகளுக்காக நிதி சேகரிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு வரிகளை விதிக்கிறது. நாடொன்றின் வரிவிதிப்பு முறைமையானது சாதாரணமாக சில வரிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. அவை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சம்பிரதாயங்கள் ஆவதுடன் வரிச்சட்டங்கள் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்பொழுது அவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

வரிவிதிப்புக் கொள்கைகள் ஏதேனும் ஐந்தினை (05) **விபரிக்க.** (05 புள்ளிகள்)

### வினா 02

பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பெறுமதிசேர் வரி (VAT) விதிக்கத்தக்க செயற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட அக்ரி சீட் (தனி) கம்பனி** விதை உற்பத்தியில் முன்னணியிலுள்ள கம்பனியாகும். கம்பனி விதைகளை இலங்கையில் உற்பத்தி செய்வதுடன் வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கிறது. **வரை. அக்ரி சீட் (தனி) கம்பனி** முன்னைய வரிமதிப்பாண்டில் வரிக்காக திருத்திய நட்டத்தைக் கொண்டிருந்ததுடன், 2015.03.31 இல் முடிவடைந்த காலாண்டிற்குரிய அதன் தகவல்கள் பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| விதைகள் விற்பனை – கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்டவை | 54,650,000 |
| விதைகள் விற்பனை - இறக்குமதி செய்யப்பட்டவை | 12,650,000 |
| அலுவலக உபகரண விற்பனை | 2,225,000 |
| வட்டி வருமானம் | 750,000 |
| | **70,275,000** |

***நீங்கள் செய்யவேண்டியது,***

***வரை.அக்ரி சீட் (தனி) கம்பனி*** 2015.03.31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் கட்டணத்தை (ESC) **மதிப்பிடுதல்** (05 புள்ளிகள்)

## வினா 04

***வரையறுக்கப்பட்ட பேப்பர் (தனி) கம்பனி*** பேப்பர் பொருட்களை விற்பனை செய்யும் மொத்த, சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 2014 டிசெம்பர் மாதத்தில் கம்பனியின் களஞ்சியத்தைப் பாதித்த வெள்ளம் காரணமாக ரூ. 500,000/- பெறுமதியான பொருட்கள் சேதமடைந்தன. ரூ. 300,000/- க்கான காப்புறுதிக் கோரிக்கையின் மூலம் நட்டமானது ரூ. 200,000/- ஆகக் குறைவடைந்தது. கம்பனி, வருமானவரிப் பொறுப் பினைக் கணிப்பிடும்பொழுது தேறிய நட்டம் ரூ. 200,000/- கழிப்பனவாகக் கோரியிருந்தது. வரிமதிப்பாளர் இத்தொகையை அனுமதிக்க முடியாத செலவாக மதிப்பீடு செய்தார்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வரிமதிப்பாளரின் தீர்மானம் சரியானதா என்பதை **விபரித்தல்.** (இது தொடர்பாக தீர்மானிக்கப்பட்ட ஏதாவது வழக்குகளைக் குறிப்பிட்டு உங்கள் தீர்மானத்தை உறுதிப்படுத்தவும்)

(05 புள்ளிகள்)

*பகுதி A முடிவடைந்தது*

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**சுரேஸ்** மற்றும் **நரேஸ்** இருவரும் பேஸ்ரி விற்பனை நிலையமொன்றை 2014.04.01 இல் பங்குடமை வியாபாரமாக ஆரம்பித்தனர். இருவரும் இலாப நட்டங்களை 1 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ள உடன்பட்டனர். 2015.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் சுருக்கிய வருமான விபரக்கூற்று பின்வருமாறு :

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| மொத்த இலாபம் | | 1,740,000 |
| **கூட்டு:** <u>ஏனைய வருமானம்</u> | | |
| சேமிப்புக் கணக்கிலிருந்து பெற்ற வட்டி | 8,000 | 8,000 |
| | | 1,748,000 |
| **கழி:** <u>செலவுகள்</u> | | |
| வாடகை – **நரேஸ்க்குச்** செலுத்தப்பட்டது | 120,000 | |
| தேய்மானம் | 20,000 | |
| சம்பளங்கள் - **சுரேஸ்** | 192,000 | |
| சம்பளங்கள் - **நரேஸ்** | 192,000 | |
| ஏனைய செலவுகள் | 378,000 | 902,000 |
| **தேறிய இலாபம்** | | **846,000** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டன :

(1) வியாபாரம் **நரேஸ்க்கு** சொந்தமான கட்டடமொன்றில் நடத்தப்படுவதுடன் அவருக்கு மாதாந்தம் வாடகையாக ரூ. 10,000/- செலுத்தப்பட்டது.

(2) வியாபாரம் ஆரம்பித்தபொழுது ரூ. 90,000/- கிரயத்தில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(3) வட்டி வருமானத்தின் மீது நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்படவில்லை.

(4) ஏனைய செலவுகளில் அனுமதிக்க முடியாத செலவுகள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை.

மேலே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில்

**நீங்கள் செய்யவேண்டியது,**

(a) பங்குடமையின் பிரிபடத்தக்க இலாபத்தைக் **கணிப்பிடுதல்** (04 புள்ளிகள்)

(b) பங்குடமையினால் செலுத்தப்படவேண்டிய வரியினைக் **கணிப்பிடுதல்** (02 புள்ளிகள்)

(c) பங்குடமையிலிருந்து பங்காளர்கள் பெற்றுக்கொள்ளும் இலாபம் மற்றும் ஏனைய வருமானங்களின் பகிர்வுக் கூற்றினைத் **தயாரித்தல்** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ஸ்பைசி வேல்ட் (தனி) கம்பனி** வாசனைத் திரவியங்கள் மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 2015.03.31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான தகவல்கள் பின்வருமாறு :

(1) 2015.03.31 இல் முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்களின் பெறுமதி, (பெறுமதிசேர் வரி (VAT) நீங்கலாக)

| மேற்கொள்ளப்பட்ட வழங்கல்கள் | பெறுமதி |
|---|---|
| நேரடி ஏற்றுமதி (US $ 1 = ரூ.130) | US $ 12,500 |
| இடைநிறுத்தப்பட்ட (Suspended) வழங்கல்களாக ஏற்றுமதியாளர்களுக்கான விற்பனை | Rs.845,000 |
| உள்ளூர் சந்தையில் விற்பனை | Rs.2,850,000 |

(2) உள்நாட்டுக் கொள்வனவுகளில் கம்பனியால் செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி ரூ. 144,600/-.

(3) கம்பனி உள்நாட்டு வழங்குநர் ஒருவரிடமிருந்து வரி வரவுக் குறிப்பொன்றை (tax credit note) பெற்றுள்ளதுடன், அதில் காட்டப்பட்ட வரித் தொகை (VAT) ரூ. 16,500/- ஆகும்.

(4) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மேலதிக உள்ளீட்டுவரி ரூ. 74,000/- ஆகும்.

(5) இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மீது பெற்றுக்கொள்ளப்பட்ட வரி வரவு உறுதிச் சீட்டுக்களின் (Credit Vouchers) தொகை ரூ. 92,950/-.

(6) 2015.03.31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பெறுமதிசேர் வரியாக செலுத்தப்பட்ட தவணைக் கொடுப்பனவுகள் ரூ. 80,000/- ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

2015.03.31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தப்பட வேண்டிய மீதி பெறுமதிசேர் வரியை **மதிப்பிடுதல்** (10 புள்ளிகள்)

## வினா 07

**சிறிவர்த்தன, சிறி ருவர்ஸ்** உரிமையாளர் ஆவார். அவர் வேறு பல மூலங்களிலிருந்தும் வருமானம் பெற்றுக் கொள்கிறார். அவர் 2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமானவரித் திரட்டினை இதுவரை சமர்ப்பிக்கவில்லை. நீங்கள் **சிறிவர்த்தனவின்** வரி ஆலோசகராவீர்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

(a) 2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமானவரித் திரட்டினைச் சமர்ப்பிக்க வேண்டிய திகதியைக் **குறிப்பிடுதல்** (02 புள்ளிகள்)

(b) வருமானவரித் திரட்டொன்றினை உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிப்பதனால் ஏற்படும் நன்மைகளை **விபரித்தல்** (03 புள்ளிகள்)

(c) வருமானவரித் திரட்டினைச் சமர்ப்பிக்கத் தவறுகையின் மீது ஆணையாளர் நாயகம் எடுக்கத்தக்க இரண்டு (02) நடவடிக்கைகளைக் **குறிப்பிடுதல்** (02 புள்ளிகள்)

(d) உரிய திகதி98யில் வருமானவரித் திரட்டினைச் சமர்ப்பிக்கத் தவறியமைக்கான தண்டத்தை ஆணையாளர் நாயகம் குறைப்பதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ ஏதுவான சந்தர்ப்பங்களை **விபரித்தல்** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவடைந்தது*

# பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட கிளாஸ் டெக்கோ (தனி) கம்பனி** 2010 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட வதிவுள்ள கம்பனியாவதுடன், அது ஐரோப்பிய சந்தைக்காக அலங்கரிக்கப்பட்ட கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. இக்கம்பனியின் தாய் நிறுவனமான **வரை. டெக்கோ குளோபல் கம்பனி** இந்தியாவில் கூட்டிணைக்கப்பட்டதாகும்..

2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரை. கிளாஸ் டெக்கோ கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

(1) **குறிப்பு 1 –** 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன்பான தேறிய இலாபம் ரூ.17,489,450/-. தேறிய இலாபத்தை அடைவதில் பின்வரும் செலவுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.1 – வெளிநாட்டுப் பிரயாணம்**

இவ்வாண்டில் உற்பத்தி முகாமையாளர், உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்து வதற்கு உபயோகிக்கப்படக்கூடிய புதிய உற்பத்தித் தொழில்நுட்பங்களைக் கற்பதற்காக இந்தியாவுக்குப் பிரயாணம் செய்தார். அதற்கான அவரது பிரயாணச் செலவு ரூ. 265,000/-.

கம்பனியின் சந்தைப்படுத்தும் குழுவினர் ஜேர்மனியில் இடம்பெற்ற வியாபாரச் சந்தையில் (trade fair) கலந்து கொண்டதுடன் அதற்கான பிரயாணச் செலவு ரூ. 540,000/-.

**குறிப்பு 1.2 – விளம்பரம்**

ஆண்டுக் காலப்பகுதியில் கம்பனிக்கு ஏற்பட்ட விளம்பரச் செலவுகள் பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| இயந்திரமொன்றை விற்பனை செய்வதற்கான பத்திரிகை விளம்பரம் | 15,000 |
| வெளிநாட்டு ஊடகங்களில் செய்யப்பட்ட விளம்பரங்கள் | 1,200,000 |
| **மொத்தம்** | **1,215,000** |

**குறிப்பு 1.3 – ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள்**

உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இவ்வாண்டின் காலப்பகுதியில் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் மூலம் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்காகக் கம்பனி ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் செலுத்திய தொகை ரூ. 1,000,000/-.

**குறிப்பு 1.4 – அரசுரிமைப் பணம் (Royalty)**

இக்காலப்பகுதியில் கம்பனி அரசுரிமைப் பணமாக அதன் தாய்க் கம்பனிக்கு செலுத்திய தொகை ரூ. 1,000,000/-.

**குறிப்பு 1.5 – நன்கொடை**

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக சுகாதார அமைச்சுக்கு கம்பனியால் வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 600,000/-.

(2) **குறிப்பு 2 -** ஏனைய வருமானங்களுள் பின்வருவன உள்ளடங்கும் :

| | ரூ. |
|---|---|
| ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலிருந்து பெறப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தித் தள்ளுபடி (Rebate) | 500,000 |
| இயந்திரமொன்றின் விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் | 180,000 |
| வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவிலிருந்து பெறப்பட்ட வட்டி (FCBU) | 265,000 |

(3) **குறிப்பு 3 -** ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விபரங்கள் பின்வருமாறு :

**கிரயம்**

| சொத்துக்கள் | 2014 ஏப்ரல் 01 இல் இருந்த மீதி ரூ. | சேர்ப்புகள் ரூ. | விற்பனை ரூ. | 2015 மார்ச் 31 இல் இருந்த மீதி ரூ. |
|---|---|---|---|---|
| காணி | 2,000,000 | - | - | 2,000,000 |
| கட்டடம் | 12,000,000 | - | - | 12,000,000 |
| தளபாடம் | 860,000 | - | - | 860,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 8,540,000 | 2,400,000 | 1,250,000 | 9,690,000 |
| கணினிகள் | 435,000 | - | - | 435,000 |
| அலுவலக உபகரணம் | 236,000 | 42,000 | - | 278,000 |
| | **24,071,000** | **2,442,000** | **1,250,000** | **25,263,000** |

**தேய்மானம்**

| சொத்துக்கள் | 2014 ஏப்ரல் 01 இல் இருந்த மீதி ரூ. | வருடத்திற்கான ஏற்பாடு ரூ. | விற்பனை ரூ. | 2015 மார்ச் 31 இல் இருந்த மீதி ரூ. |
|---|---|---|---|---|
| கட்டடம் | 4,800,000 | 1,200,000 | | 6,000,000 |
| தளபாடம் | 688,000 | 34,400 | | 722,400 |
| பொறி மற்றும் இயந்திரம் | 6,832,000 | 341,600 | 1,000,000 | 6,173,600 |
| கணினிகள் | 348,000 | 17,400 | | 365,400 |
| அலுவலக உபகரணம் | 188,800 | 9,440 | | 198,240 |
| | **12,856,800** | **1,602,840** | **1,000,000** | **13,459,640** |

**குறிப்பு 3.1**

கம்பனி 2014 மே 01 ஆந் திகதி பழைய இயந்திரமொன்றை விற்பனை செய்து, அப்பழைய இயந்திரத்திற்குப் பிரதியீடாக 2014 செப்ரெம்பர் 01 ஆந் திகதி புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது.

**குறிப்பு 3.2**

2014 ஏப்ரல் 01 ஆம் திகதியன்று மீதியாக இருந்த ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் கம்பனி இயங்க ஆரம்பித்த 2010/11 ஆம் வரிமதிப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கருதவும்.

(4) **குறிப்பு 4 -** ஏனைய தொடர்புடைய தகவல்கள் :

**குறிப்பு 4.1**

வரித் தேவைகளுக்காக 2014 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் திருத்திய வியாபார இலாபம் ரூ. 12,500,000/-.

**குறிப்பு 4.2**

2013/14 ஆம் வரிமதிப்பாண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட வரிவிதிக்கத்தக்க வியாபார நட்டம் ரூ. 2,435,000/-.

**குறிப்பு 4.3**

2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்காகச் செலுத்தப்பட்ட சுயமதிப்பீட்டு வரி ரூ. 750,000/-.

***நீங்கள் செய்யவேண்டியது,***

2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுதல்** :

(a) மொத்த நியதிச் சட்ட வருமானம்,

(b) வரிமதிப்பிடு வருமானம்,

(c) வரிவிதி வருமானம்,

(d) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(e) செலுத்த வேண்டிய மீதிவரி

**குறிப்பு :** ஏதேனும் கிரயங்கள் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது அனுமதிக்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

வதிவுள்ள தனியாரான **ரணசிங்க** இலங்கையில் பிஸ்கட் உற்பத்தியில் முன்னணியிலிருக்கும் கம்பனியொன்றின் உற்பத்தி முகாமையாளராகப் பணியாற்றுகிறார். 2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கான (இதன் பின்பு வருடம் எனக் குறிப்பிடப்படும்) **ரணசிங்க** தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) அவர் மாதாந்தச் சம்பளமாக ரூ. 100,000/- பெற்றுக்கொண்டார். 2015 சனவரியில் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஒரு மாதச் சம்பளம் வழங்கப்பட்டது.

(2) அவருக்கு கம்பனி மோட்டார் கார் ஒன்றை (இயந்திர வலு 2000cc) எரிபொருளுடன் வழங்கியதுடன் அதன் ஓட்டம் தொடர்பான பதிவுகள் எதுவும் பேணப்படவில்லை.

(3) அவர் மொரட்டுவையில் வாடகை வீடொன்றில் வசித்து வருகிறார். வீட்டு வாடகைச் செலவினை அவரே பொறுத்துக் கொள்வதுடன் அதன் மாத வாடகை ரூ. 40,000/- ஆகும். அவர் கம்பனி யிலிருந்து வதிவிடத்திற்கான கொடுப்பனவொன்றாக (allowance) மாதாந்தம் ரூ. 50,000/- பெற்றுக் கொண்டார்.

(4) வருட காலப்பகுதியில் அவரது மகன் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த துடன் அவர் கம்பனியிலிருந்து ரூ. 100,000/- பரிசொன்றைப் பெற்றுக்கொண்டார். அப்பணம் சிறியோர் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டது.

(5) தனது பெற்றோரிடமிருந்து முதுசமாகப் பெற்றுக்கொண்ட கண்டியில் உள்ள வீட்டினை, அவர் 2014 சனவரியிலிருந்து ரூ. 20,000/- மாதாந்த வாடகைக்குக் கொடுத்திருந்தார். அவ்வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ. 90,000/- ஆவதுடன் சோலைவரி 20% இல் செலுத்தப்பட்டது.

(6) வருட காலப்பகுதியில் பெறப்பட்ட வட்டி வருமானம் பின்வருமாறு :

நிலையான வைப்பு மீது : ரூ. 69,000/- (8% நிறுத்தி வைத்தல் வரி கழித்த பின் தேறியது)
சிறியோர் சேமிப்புக் கணக்கு மீது : ரூ. 3,000/-

(7) வருட காலப்பகுதியில் அவர் இலங்கை வங்கியிலிருந்து ரூ. 500,000/- தனிப்பட்ட கடனொன்றைப் பெற்று அப்பணத்தினை விலைகோரப்பட்ட (quoted) பங்குகளில் முதலீடு செய்தார். அவர் இவ்வருடத்திற்கு ரூ. 52,000/- மற்றும் ரூ. 190,000/- முறையே இக்கடனுக்கான வட்டியாகவும் கடன் மீள்கொடுப்பனவாகவும் செலுத்தியிருந்தார்.

(8) வருட காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட பங்கிலாபங்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது :

| | **மொத்தப் பங்கிலாபம் ரூ.** | **நிறுத்தி வைத்தல் வரி ரூ.** | **தேறிய பங்கிலாபம் ரூ.** |
|---|---|---|---|
| வேறு கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபத்திலிருந்து செலுத்தப்பட்டவை | 18,000 | 1,800 | 16,200 |
| இலாபங்கள் மற்றும் வருமானங்களிலிருந்து செலுத்தப்பட்டவை | 7,000 | 700 | 6,300 |
| **மொத்தம்** | **25,000** | **2,500** | **22,500** |

(9) வருட காலப்பகுதியில் **ரணசிங்க** விற்பனை செய்த பங்குகளின் விபரங்கள் பின்வருமாறு :

| **கம்பனி** | **பங்குகளின் எண்ணிக்கை** | **கிரயம் (ரூ.)** | **விற்பனை (ரூ.)** | **இலாபம் (ரூ.)** |
|---|---|---|---|---|
| **ABC PLC** | 10,000 | 186,000 | 220,000 | 34,000 |
| **PQR PLC** | 6,000 | 245,000 | 300,000 | 55,000 |
| **XYZ PLC** | 2,000 | 80,000 | 65,000 | (15,000) |
| | | **511,000** | **585,000** | **74,000** |

(10) அவர், அங்கவீனர்களுக்கு நிறுவனப்படுத்தப்பட்ட பராமரிப்பு வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனம் ஒன்றிற்கு ரூ. 20,000/- நன்கொடை வழங்கினார். மேலும், அவர் ''நமக்காக நாம்'' (அப்பி வெனுவென் அப்பி) நிதியத்திற்கு ரூ. 100,000/- நன்கொடை வழங்கினார்.

(11) வருடத்திற்காகக் கழிக்கப்பட்ட உ.பொ.செ. (PAYE) வரி ரூ. 96,000/-.

(12) அவர் சுய வரி மதிப்பீட்டு அடிப்படையில் செலுத்திய வருமான வரி ரூ. 10,000/-.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து

***நீங்கள் செய்யவேண்டியது,***

2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **ரணசிங்கவுக்கு** பின்வருவனவற்றை **மதிப்பிடுதல்**

(a) வரிவிதி வருமானம்,

(b) செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்தவேண்டிய மீதி வரி

**குறிப்பு :** ஏதேனும் கிரயங்கள் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது அனுமதிக்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவடைந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க** (Define) | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக** (Draw) | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க** (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக** (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக** (Relate) | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக** (State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக** (Calculate / Compute) | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க** (Discuss) | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக** (Explain) | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக** (Interpret) | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல்** (Recognize) | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க** (Record) | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக** (Summarize) | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக** (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக** (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக** (Demonstrate) | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக** (Graph) | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக** (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக** (Prioritize) | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க** (Reconcile) | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக** (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க** (Analyze) | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக** (Compare) | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக** (Contrast) | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக** (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக** (Outline) | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |